செ.வெ.எண்: 07 நாள் : 04.01.2011

## தமிழ் மொழி வளர்ச்சிக்கும், சமூகநீதி மேம்பாட்டுக்கும் பாடுபடும் சான்றோர்களுக்கு வழங்கப்படும் அய்யன் திருவள்ளுவர் விருது உள்ளிட்ட விருதுகள் !

## தமிழக அரசு அறிவிப்பு!

தமிழ் மொழி வளர்ச்சிக்கும், தமிழ்ப் பண்பாட்டு மேன்மைக்கும் தொண்டாற்றிடும் தமிழறிஞர்கள், கவிஞர்கள், சமூக நீதிக்கு உழைத்திடும் பெருமக்கள் ஆகியோரில் சிறந்தோரைத் தேர்வு செய்து சான்றோர்கள் பெயரில் ஆண்டுதோறும் அரசு விருதுகள் வழங்கிப் போற்றிடும் சீரிய திட்டம் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி,

2011ஆம் ஆண்டிற்கான "அய்யன் திருவள்ளுவர் விருது" முனைவர் பா. வளன் அரசு அவர்களுக்கு வழங்கிட தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

2010ஆம் ஆண்டிற்கு,

சமூக நீதிக்கான "தந்தை பெரியார் விருது" திரு.கோ. சாமிதுரை அவர்களுக்கும்;

"அறிஞர் அண்ணா விருது" திரு. து. ரவிக்குமார், எம்.எல்.ஏ., அவர்களுக்கும்;

"அம்பேத்கர் விருது" திருமதி.டி. யசோதா, எம்.எல்.ஏ., அவர்களுக்கும்;

"பெருந்தலைவர் காமராசர் விருது" திருமதி. ஜெயந்தி நடராஜன், எம்.பி.

அவர்களுக்கும்;

"பாரதியார் விருது" திரு. நா. மம்மது அவர்களுக்கும்;

"தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது" பேராசிரியர் அ. அய்யாசாமி அவர்களுக்கும்;

"பாவேந்தர் பாரதிதாசன் விருது" முனைவர் இரா. இளவரசு அவர்களுக்கும்;

"முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது" முனைவர் இரா. மதிவாணன் அவர்களுக்கும்

வழங்கிட தமிழக அரசு இன்று (4.1.2011) முடிவு செய்து அறிவித்துள்ளது.

விருது பெறுவோர் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் பொற்கிழியுடன், தங்கப்பதக்கமும், தமிழக அரசின் சார்பில் அணிவிக்கப்படும். 16.1.2011 திருவள்ளுவர் தினத்தன்று மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் அவர்கள் தலைமையில் சென்னையில் நடைபெற உள்ள விழாவில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விருதுகளை வழங்கிச் சிறப்பிப்பார்.

* * * * *

வெளியீடு:–

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.